




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கல்குளம் வட்டம், அம்மாண்டிவிளை புனித ஜான்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு கருத்தரங்கை இன்று (11.01.2017) துவக்கி வைத்து, உரையாற்றினார். நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் திரு. ஜான்பாஸ்கோ உட்பட அரசு அலுவலர்கள் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 27/2017 நாள்: 11.01.2017

## பத்திரிகைசெய்தி

---

**தேர்தல் விழிப்புணர்வு சிறப்புவிழா** (Systematic Voter Education and Electoral Participation(SVEEP)) கல்குளம் வட்டம் அம்மாண்டிவிளை புனித ஜான்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று 11.01.2017 காலை 10 மணிக்குநடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்டஆட்சித்தலைவர்திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்தார். புதிய இளம் வாக்காளர்கள் 18 முதல் 19 வயதுடைய கல்லூரி மாணவர்கள் அனைவரும் விடுபடாது வாக்காளர்களாக வாக்காளர் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்றும், ஒவ்வொரு வருடமும் ஜனவரி மற்றும் தொடர் திருத்தத்தின்போதும் வெளியிடப்படும் வாக்காளர் பட்டியலில் பெயர்கள் இடம் பெற்றுள்ளதா, திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும் என்றும், தேசிய வாக்காளர் தினமான ஜனவரி 25ம் தேதிபுதிதாகவாக்காளர்பட்டியலில் இடம்பெற்ற அனைவருக்கும் வண்ணபுகைப்படஅடையாளஅட்டைவழங்கப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். 05.01.2017 அன்று வெளியிடப்பட்டவாக்காளர்பட்டியலில் 18-19 வயது நிரம்பிய சுமார் 12000 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர். இளைஞர்கள் பெருமளவில் விடுதலின்றி வாக்காளராக பதிவு செய்து ஜனநாயகத்தை வலுப்பெற செய்யவேண்டும் என்றும்,உங்களது உரிமையை ஒருபோதும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்றும் மாவட்டஆட்சித்தலைவர் கூறினார். ஒவ்வொருவாக்கும் முக்கியம் என்பதையும் வாக்காளராக முதலில் பதிவுசெய்தால்தான் வாக்களிக்கும் தகுதி பெறமுடியும் என்பதையும் மாவட்ட ஆட்சியர் வலியுறுத்தினார். ஒவ்வொருவருடமும் இந்தியதேர்தல் ஆணைய அறிவுரையின்படி கல்லூரி மாணவ/மாணவிகளிடையே வாக்காளரின் முக்கியத்துவம், கடமை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இணையதளம் மூலம் கல்லூரியிலிருந்தே உரிய படிவத்தில் வாக்காளராக பதிவுசெய்ய பதிவேற்றம் செய்யலாம். இந்திய குடியரசு தினமான ஜனவரி-26ம் தேதிக்கு முந்தையநாள், அதாவது ஜனவரி-25ம் தேதி இந்திய தேர்தல் ஆணையம் தோற்றுவிக்கப்பட்ட தினத்தில் தேசிய வாக்காளர்தினம் கொண்டாடப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமை உரையாற்றினார். இவ்விழாவின் தொடக்கத்திலும் இறுதியிலும் மாணவ/மாணவியரின் கலைநிகழ்ச்சிநடைபெற்றது. எழுத்தறிவுமிக்ககன்னியாகுமரிமாவட்டத்தில் வாக்குப்பதிவு வருங்காலங்களில் பெருமளவில் இருக்கவேண்டியதன் அவசியத்தை வாக்குப்பதிவு அலுவலர் மற்றும் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு.ஆ.ராஜ்குமார் கல்லூரி மாணவ/மாணவிகளிடையே விளக்கிக் கூறினார். கல்குளம் வட்டாட்சியர் திருமதி.தா.புவனேஸ்வரி,தேர்தல் தனி வட்டாட்சியர் திரு.ப.சுப்பிரமணியன், கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் திரு.ஜாண்பாஸ்கோஆகியோர்வாக்காளராகபதிவுசெய்வது, இளையவாக்காளர்கள் பெருமளவில் வாக்குப்பதிவில் பங்கேற்பது குறித்து எடுத்துரைத்தனர். கல்குளம் வட்டதேர்தல் துணை வட்டாட்சியர் திரு.கந்தசாமி, கல்லூரி நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். இவ்விழாவின் இறுதியில் கல்லூரிமுதல்வர்திருமதி.ஜெபமலர்நன்றி கூற விழா இனிதேமுடிவுற்றது.

மாவட்டதேர்தல் அலுவலர்மற்றும்
மாவட்டஆட்சித்தலைவருக்காக,
கன்னியாகுமரிமாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.